1971 ஜூன் 24]

சேலம் உருக்காலை.

* 40 வினா—திரு. கே. ஏ. வகாப் :

திரு. என். கே. பழனிச்சாமி :

டாக்டர் எச் வி ஹாண்டே : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

சேலம் உருக்காலை சம்பந்தமாக தஸ்தூர் கம்பெனியின் தொழில் நுட்பப் பொருளாதார அறிக்கை அரசுக்குக் கிடைத்து விட்டதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

* 41 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) சேலம் உருக்காலைக்காக 1970-ம் ஆண்டு முடிய ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் எவ்வளவு ? மேலும் ஆர்ஜிதம் செய்யப்பட இருக்கும் நிலம் எவ்வளவு ?

(இ) இந்தத் திட்டத்தினால் எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) 43.38 ஏக்கர். மேலும் ஆர்ஜிதம் செய்யப்பட இருக்கும் நிலத்தின் அளவு பற்றி மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு இன்னும் இறுதி முடிவு வரவில்லை. இது சுமார் 4,370 ஏக்கர் இருக்கும் என்று தெரிகிறது.

(இ) இந்தத் திட்டத்தினால் சுமார் 3,000 பேருக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படலாம் எனக் கருதப்படுகிறது.

* 42 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Union Government's orders have been received by the State Government for the formation of a Corporation to run the Salem Steel Plant; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இல்லை.

* 43 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether iron ore rocks were blasted at Kanjamalai in Salem district about March 1970 for the second pilot mine; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்:

1. கல்கத்தாவை சேர்ந்த ஆலோசனைப் பொறியாளர் திருவாளர்கள் எம். என். தஸ்தூர் கம்பெனியாரின் பரிந்துரையின்படி காஞ்சமலையில் உள்ள இரும்புக்கனி படிவங்களில் இரண்டு சோதனைச் சுரங்கங்கள் தோண்டப் பட்டன. இரண்டாவது சோதனைச் சுரங்க வேலை 12—12—1969-ம் தேதி துவங்கி 23—2—1970-ம் தேதி எல்லா வகையிலும் முடிவு பெற்றது. முதல் சோதனைச் சுரங்க வேலை 18—2—1970-ம் தேதி துவங்கி 13—5—1970-ம் தேதி முடிவு பெற்றது.

2. ஆலோசனைப் பொறியாளர்களின் பரிந்துரையின் பேரில் நடத்தப்பெற்ற ஆய்வின் ஒரு பகுதியாக மேற்படி சோதனைச் சுரங்க வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. சுரங்கம் தோண்ட தேவைப்படும் முக்கிய ஆதாரத் தகவல்களான கனிப் படிவங்களின் தன்மை, துளையிடுதல், சுரங்க அமைப்பு, வெடித்தல் மற்றும் வெடித்துச் சிதறிய கனிப் பொருள்களை சேகரித்தல் ஆகியவற்றை எந்த முறையில் கையாண்டு செய்வது என்று நிர்ணயிக்க இந்தச் சோதனைகள் எடுத்துக் கொள்ளப் பட்டன. சோதனைச் சுரங்கங்களின் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்களை ஆலோசனைப் பொறியாளர்கள் ஆய்ந்து பார்த்து காஞ்சமலைக் கனிப்படிவங்களை வெட்டி எடுப்பதற்காக அவர்களுடைய விரிவான திட்ட அறிக்கையில் அவர்களது பரிந்துரையைத் தெரிவிப்பார்கள்.

DR. H. V. HANDE : Sir, in spite of the fact that some apparent headway has been made in the Salem Steel Project, we hear frequent reports that no concrete steps have been taken by the Central Government to expedite the implementation of the Project. Even the Hon. Chief Minister in his Budget speech has stated that there is delay and that he would like the Central Government to expedite it. So, may I know from the Hon. Minister where exactly is the delay and what is the hitch? Will he be able to enlighten this House on these points?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீண்ட நாளாகக் கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பது யாரும் அறிந்ததுதான். இந்த அரசாங்கத்தின் முயற்சியின் காரணமாக இந்தத் திட்டம் ஒப்புக் கொள்ளப்பட்டது. அதன் மேல் தொடக்க விழாவும் நடத்தப்பட்டது. தேர்தலுக்குப் பிறகு பொறுப்பு ஏற்றுள்ள மத்திய அமைச்சரவை இதில் அக்கறை காட்டி நாம் செய்வதாக இருந்ததை அவர்கள் ஏற்றுக்கொண்டு, இந்த வேலைகளைத் தொடங்க முற்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கும் பிரசினை 1964-ல் தயாரித்த ‘டி.பி.ஆர்’ டீடெய்ல்ட் ப்ராஜக்ட ரிபோர்ட்டுக்குப் பிறகு, டெக்னோ எகனமிக் ஃபீஸிபிலிடி ரிபோர்ட் தயாரிக்கப்படுகிறது. அதையும் இந்த தஸ்தூர் கம்பெனியே தயாரிப்பது என்று, அந்த கம்பெனிக்கே கொடுக்கப் பட்டிருக்கிறது. தஸ்தூர் கம்பெனிக்கு அனுமதி தந்திருக் கிறார்கள், அவர்கள் வேலை செய்துவருகிறார்கள். அவர்களுடைய அறிக்கை கிடைத்தவுடன் விரைவாக வேலைகள் நடத்தப்படும்.

1971 ஜூன் 24]

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, சேலம் உருக்காலையின் நிர்வாகத்தை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருப்பதாக அமைச்சர் சொன்னார்கள். இதனால் காலதாமதம் ஏற்படுகிறது என்றால், நம்முடைய மாநில அரசே அதை ஏற்று உடனடியாக செயல்படுத்த நம் அரசு மத்திய சர்க்காரிடம் கோருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சேலம் உருக்காலைக்கு மத்திய சர்க்கார் பொறுப்பு ஏற்கவேண்டும் என்பதுதான் நம்முடைய எண்ணம். அது கிட்டத்தட்ட நூறு கோடிக்கு மேல் பணம் போட்டு நடத்தப்படும் திட்டம். அந்தத் திட்டம் தடைபடாமல் வேலைகள் நடக்க தனியாக ஒரு வாரியம் அமைக்க வேண்டும் என்றும், அந்த வாரியத்தில் இந்த அரசாங்கத்திற்கு முழுப் பங்கு தரவேண்டும் என்றும் ஆலோசனைகள் சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது கேள்வி நேரம் முடிவடைந்து விட்டது. இன்னும் 15 நிமிஷம் ஆகலாம், இந்தத் துணைக் கேள்விகள் பதில்கள் முடிவடைய. ஆகவே, அவையின் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எஸ். ஆறுமுகம் : சேலம் இரும்பாலைக்கு நில ஆர்ஜிதம் செய்ய 1964-ம் ஆண்டு நோடிபிகேஷன் செய்தார்கள். இதுவரையில் அதன்மேல் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே, இப்பொழுது நிலத்தை எடுக்கும் நேரத்தில் இப்பொழுதுள்ள மார்கெட் மதிப்பை வைத்து நில ஆர்ஜிதம் செய்ய சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விவசாயிகளுக்காக இந்தக் கேள்வியைக் கேட்டதற்காகப் பாராட்டுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, துவக்க விழாவை அவசர, அவசரமாக தேர்தலுக்கு முன்னால் நடத்திய போதே தஸ்தூர் கம்பெனியாரின் அறிக்கை போதுமா போதாதா என்பதை மத்திய சர்க்காரோடு ஆலோசித்து, துவக்க விழாவை நடத்தியிருக்கலாம். துவக்க விழாவை மட்டும் அவசர அவசரமாக தேர்தலுக்கு முன்னால் நடத்திவிட்டு, மீண்டும் புதிய அறிக்கை வேண்டும் என்பதால் வேலை தடைப்பட்டிருப்பதைத் தவிர்க்க, உடனடியாக நடவடிக்கை எடுக்க அமைச்சர் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவசர அவசரமாக நடக்க வேண்டும் என்றுதான் தமிழ் சமுதாயம் கருதுகிறது. அவசரமாக தேர்தலுக்கு முன்னால் நடப்பதில் அம்மையாருக்கு உள்ள வேதனை புரிகிறது. எங்கள் அரசு வந்தபிறகுதான் வேகமாக வேலைகள்

நடக்கின்றன. தஸ்தூர் அறிக்கையைத் தள்ளி விட்டார்கள் என்று சொல்லவில்லை. முன்பு இருந்தது டிடெய்ல்ட் ப்ராஜக்ட் ரிபோர்ட். அடுத்த கட்டமாக பொருளாதாரத் துறையில் "ஃபீஸிபிலிடி ரிப்போர்ட்" தயாரிக்கிறார்கள். 1964-ம் ஆண்டிலிருந்து ஆன தாமதத்திற்கு அம்மையார் கட்சிதான் காரணம் என்று மக்கள் கருதுகிறார்கள். எங்களுடைய அரசு வந்த பிறகு, 64-ம் ஆண்டு அறிக்கையோடு பொருளாதாரத் துறையிலும் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்பதுதான் நிபுணர்களுடைய கருத்து, அந்தக் கருத்தைத்தான் நாங்களும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

திரு. எஸ். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, இப்பொழுது இந்த ஆண்டு 1,000 ஏக்கர் இரும்பு ஆலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படி 1,000 ஏக்கர் பரப்பில் குடியிருப்பவர்கள் வெளியேற்றப் படும்போது, வேறு வீட்டு வசதி செய்து கொடுக்கும் முறையிலும், இரும்பு ஆலைக்கு நிலம் எடுப்பதால், வெளியேற்றப் படுகிறவர்களுக்கு அந்த இரும்பு ஆலையில் வேலை வாய்ப்புக்கள் ஏற்படுத்தவும் சர்க்கார் பரிசீலனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தப் பிரச்சினை தொடர்ந்து பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று. மாவட்ட ஆட்சித் தலைவர் வெளியேற்றப்படும் நிலச் சொந்தக்காரர்களுக்கு பாதகம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்.

திரு. எம். சுரேந்திரன்: சார், உருக்காலைக்காக நிலம் ஆர்ஜிதம் செய்யும்போது, ஏராளமான உண்மையான விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். சட்டப்படி நில ஆர்ஜிதம் செய்து, நஷ்ட ஈடு அளிக்கிறோம். சட்டப்படி என்றாலும், தார்மீக முறையில் உண்மையான விவசாயிகளுக்கு வேறு எங்காவது நிலம் கண்டு பிடித்துக் கொடுக்க முயற்சி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நிலம் எங்கே இருக்கிறது என்று ஆராய்ந்து, வேண்டும் என்று கேட்டால், வெளியேற்றப் படுகிறவர்களுக்குக் கொடுக்கலாம். அப்படி குந்தா போன்ற திட்டங்களில் அவர்களுக்கு முதல் சலுகை காட்டப்படுகிறது. அப்படியே இப்பவும் சலுகை காட்டப்படும்.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, சேலம் உருக்காலை மூலம் கிடைக்கப் போகின்ற வருவாயில் நம் அரசுக்கு பங்கு தருவதாக மத்திய சர்க்கார் ஒத்துக் கொண்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நாம் பணம் போட்டால் பங்கு தருவார்கள்.

1971 ஜூன் 24]

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, கால தாமதத்திற்கு அம்மையாருடைய கட்சிதான் பொறுப்பு என்று அமைச்சர் கூறினார்கள். 1967-க்கு பின்னால் ஏற்பட்ட காலதாமதத்திற்கு இந்த அரசுதான் பொறுப்பு என்று அமைச்சர் உணருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அம்மையார் சார்ந்த கட்சி தான் அங்கேயும் இருந்தது. இப்பொழுது எங்கள் ஆதரவு பெற்ற கட்சி அங்கேயும் வந்தவுடன் துரிதமாக வேலைகள் நடக்கின்றன.

DR. H. V. HANDE : Sir, the Hon. Minister has explained in his reply that the Report of the Dastur Committee has been given and it is under re-examination with regard to other details. May I know whether the cost of the Project is large? It was originally estimated at about Rs. 90 crores, less than Rs. 100 crores. May I also know whether there is any difference between the original estimated cost and the amount that is going to be spent as a result of the latest investigation. Also may I know whether the Union Government have taken a decision on the capacity of the plant, and whether it would have a capacity of 250,000 tonnes to start with and 500,000 tonnes to be developed later? Will the Hon. Minister enlighten this House on these points?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதற்கு ஆகக் கூடிய செலவு, கனம் அங்கத்தினர் சொல்வதுபோல் உண்மையாகவே ஏற்கெனவே இருந்தது 95 கோடிதான். அதிகமான நிலைதான் எதிர்பார்க்கப் படுகிறது. திட்டமாக அறிக்கை வந்தபிறகுதான் தெரியும். எவ்வளவு உற்பத்தி என்பதைப் பொறுத்தவரையில், இப்பொழுது என்று ஆராய்ந்து பார்க்கப்படுகிறது. எப்படிப்பட்ட பொருள், எவ்வளவு அளவு செய்தால் லாபகரமாக இருக்கும் என்பதெல்லாம் நிர்ணயிக்கத்தான் ப்ராடக்ட் மிக்ஸ் ஸ்டடி நடத்தப்படுகிறது. அப்பொழுது, கனம் அங்கத்தினர் கூறியது போல், 5 லட்சத்தை ஆரம்பத்திலேயே செய்வதா அல்லது இரண்டு கட்டத்திலே செய்வதா என்பதை முடிவு செய்வார்கள்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, அமைச்சர் பதில் சொல்லும்போது, சேலம் உருக்காலையில் 3,000 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று குறிப்பிட்டார்கள். மத்திய சர்க்கார் நிறுவனம் என்றாலே, மற்ற மற்ற மாநிலங்களிலிருந்து வருபவர் களுக்கே வேலை கொடுக்கிறார்கள். அந்த நிலையில்லாமல், இந்த சேலம் உருக்காலையில் அப்படி ஏற்படாமல், வேலைக்கு எடுப்பவர்கள், தமிழ் நாட்டைத் தாய் நாடாகக் கொண்ட வர்கள்தான் என்று வலியுறுத்தி ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அங்கத்தினர் கூறியது அருமை யான கருத்து. தமிழ்நாட்டைத் தாய் நாடாகக் கொண்டவர்கள் என்று சொன்னார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந் தாலும் சரி பிற மாநிலத்தவராயினும் சரி, தமிழ்நாட்டைத் தாய்

நாடாகக் கொண்டவர்கள் எவராயினும் அவர்களுக்கெல்லாம் கொடுக்கிறோம். தமிழ்நாட்டை, தமிழர்களை மதிக்கிற அரசுதாம் தொடருகிறது.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, இந்த கார்ப்பரேஷனுடைய சேர்மன்கள் மற்றும் போர்டு அங்கத்தினர்கள் நியமனம் விஷயத்தில் மாநில அரசு மத்திய அரசினுடைய சிபார்சுகளை அப்படியே ஏற்க வேண்டுமென்று மாநில அரசுக்கு மத்திய அரசு உத்திரவு அனுப்பியதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வாரியம் வந்தவுடன் அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இந்த உருக்காலைத் திட்டம் தமிழகத்திலே மைசூரிலே ஆந்திரத்திலே ஒரே நேரத்தில் மத்திய அரசால் உருவாக்கப்பட்டது. தமிழ்நாட்டில் மட்டும் இந்தத் திட்டம் காலதாமதப்படுகிறது, மைசூர், ஆந்திர மாநிலங்களில் அந்தத் திட்டம் வேகமாக செயல்படுகிறது என்பது உண்மையா? அதற்குரிய காரணம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் குறை மைசூரிலும் ஆந்திரத்திலும் சொல்வதாகத்தான் நான் கேள்விப்பட்டேன், தமிழ்நாட்டிலேதான் வேகமாக நடைபெறுகின்றது. காரணம் ஏற்கெனவே நாம் இந்த டி. பி. ஆர். (Detail Projest Report) தயாரித்து செயல்பட்டு ஆர்ஜிதப்பட்டு விட்டது. ஆகவே, தமிழ்நாட்டிலேதான் வேகமாக செயல்பட்டு வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இது சம்பந்தமாக தஸ்தூர் கமிஷன் அறிக்கை காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையை செயல்படுத்துவதில் இந்த அரசு காலதாமதப்படுத்துகிறது என்று பொதுமக்கள் பேசுகின்றார்களே அது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அது டிடெயில்டு ரிப்போர்ட்டு இப்பொழுது டெக்னோ எகனாமிக் சர்வே ஃபீசிபிலிடி ரிப்போர்ட்டு கொடுக்கப்பட்டு இருக்கிறது. இந்தக் கேள்வியின் அடிப்படையிலேயே ஏதோ இந்த அரசு எதுவும் செய்யவில்லை என்பது மாதிரி கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு ஏற்ற வகையிலேயே பதிலும் தரப்பட்டது. முன்னாள் அமைச்சர் திரு. வெங்கட்ராமன் அவர்கள் இந்த முயற்சியைத் தன்னுடைய சொந்த முயற்சியாக எடுத்துக் கொண்டு பாடுபட்டார்கள் என்பதைத் தமிழக மக்கள் என்றைக்கும் மறக்கமாட்டார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களும் இதுபற்றிக் குறிப்பிட்டு முன்னாள் தொழிலமைச்சருக்கும் முன்னாள் முதலமைச்சருக்கும் இந்த அரசின் சார்பில் தனது பாராட்டைத் தெரிவித்தது எதிர்கட்சித் தலைவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.

1971 ஜூன் 24]

திரு. எஸ். ஷண்முகம் : தலைவரவர்களே இரும்பாலை பெறுவதற்கு 'எழுச்சி நாள்' கொண்டாடித்தான் பெற முடிந்தது. இந்த 'தஸ்தூர் கமிஷன்' தொழில் நுட்ப பொருளாதார அறிக்கையைத் தயாரித்துக் கொடுப்பதற்குக் காலதாமதம் ஏற்படுகின்றதே அந்த இரும்பாலைத் திட்டம் எந்த ஆண்டில் உற்பத்தியைத் துவக்கும் என்பதைத் அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மிக விரைவிலே உற்பத்தி தொடங்க வேண்டும் என்பது நம்முடைய விருப்பம். இப்போது மத்திய உருக்கு அமைச்சராக பொறுப்பேற்றிருப்பவரின் ஆர்வத்தைப் பார்க்கும்போது இந்த 5 ஆண்டுத் திட்டத்தில் இதற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் முழுமையாக செலவிடப்பட்டு மேலும் இதற்குப் பணம் தருவார்கள் என்று நம்புகிறோம்.

திரு. ந. நாச்சியப்பன் : தமிழகத்திலே கைத்தறி நெசவுத் தொழில் நாளுக்குநாள் சீரழிந்துகொண்டு வருகிறது. இந்த நிலையில் சேலம் இரும்பாலைத் திட்டம் துவங்கப்பட்டால், அந்தத் தொழிலில் இப்படிப்பட்ட கைத்தறியாளருக்கு முதல் இடம் கொடுக்க மத்திய அரசாங்கத்தை இந்த அரசாங்கம் கேட்டுக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உருக்காலைக்கு தேவைக்கு ஏற்ப முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, an industry is proposed to be started on the project report. Subsequently the starting of the project is being blocked by another report, techno economic feasibility report, regarding the possibility of manufacturing certain articles. The first principle should be the project report. On that basis, the industry should be started. Later on, when there are further developments . . . . . .

THIRU M. GANAPATHY : On a point of Order.

(THIRU K. M. SUBRAMANIAM : Point of order on question !)

THIRU M. GANAPATHY : According to the rules providing for supplementaries, this is not a supplementary coming within the four corners of the prescribed rules. So that question should not be allowed.

MR. SPEAKER : It is for the Speaker to decide.

THIRU K. M. SUBRAMANIAM : We recognise only one Speaker and I am recognising you only, Mr. Speaker.

MR. SPEAKER : Please put the question.

THIRU K. M. SUBRAMANIAM : When a project report is given the first principle is to start the project. Why should another report stand in the way of starting of the project. It may be necessary later on to amend something according to new.

considerations. May I know why the Techno Economic Survey Feasibility Report should stand in the way of starting of the project?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்படி இன்னெரு அறிக்கை தயாராகும் முகத்தான் இந்த உருக்காலைத் திட்டம் காலதாமதப் பட்டதோ என்ற அச்சம்தான் இந்தக் கேள்விக்குப் பின்னுல் இருக்கிறது என்று நம்புகிறேன். அந்த உணர்ச்சியைப் பாராட்டு கிறேன். மத்திய அரசாங்கம்தான் காலதாமதப்படுத்துகிறது. 1964 விளக்க அறிக்கை 1971-72-ல் நிறைவேற்றும்போது அதை அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கேட்டார்கள். அதை ஆதரிக்கின்ருேம். எப்படியாவது விரைவிலே வந்தால் பாராட்டு வோம்.

நிலவள வங்கிகளிலிருந்து கடன்கள்.

* 44 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நில அடமான பாங்குகளில், தனி நபருக்கு வழங்கப் படும் கடன் தொகையின் உச்ச அளவு என்ன?

(இ) இதை அதிகரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :

(அ) கடன் வழங்கும் நோக்கம்	உச்ச அளவு
	ரூ.
1. டிராக்டர் வாங்க	40,000
2. கிணறு வெட்ட	35,000
3. பம்பு ரூம் கட்டுவதற்கும் மோட்டார் பம்பு செட் வாங்கவும்	5,000
4. கிணறு ஆழப்படுத்த	10,000
5. நிலச் சீர்திருத்தம்	5,000

(இ) இல்லை.

திரு. சு. துரைசாமி : அமைச்சரவர்கள் குறிப்பிட்ட இந்த ரூ. 40,000 என்பது கோவை மாவட்டத்திற்குப் போதுமானதாக இல்லை. இதை அதிகரிக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : உறுப்பினர் அவர்கள் கருத்தை இந்த அரசு கவனித்து பரிசீலிக்கும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : இந்த ஸ்டேட் டெவலப்மெண்டு பாங்கு திட்டமிட்டபடி செலவு செய்து இருக்கிறதா? அப்படி இல்லையானுல், அதற்குக் காரணம என்ன? நிர்வாகச் சிக்கலா?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS